பிரதான நகரங்களில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 19 இதழ் 297
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 04 — 12 — 1992


## பிரதான நகரங்களில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பிரதான நகரங்களின் பாதுகாப்பு கடந்த வாரம் முதல் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, கண்டி, மட்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை ராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

திருகோணமலை இராணுவ முகாம்மீது கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக கூட்டுப்படைத் தலைமையக பிரிகேடியர் என். ஆர். பி. அஹங்கம தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி படகு சேவை மீண்டும் ஆரம்பம்

(பளை)

கடந்த சில தினங்களாக தடைபட்டிருந்த கிளாலிப் படகுச்சேவை மீண்டும் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமானது.

கிளாலியிலிருந்து மிகவும் குறைவான பயணிகளே நேற்றுமுன்தினம் பயணம்

(4-ம் பக்கம் பார்க்க)

### தற்கொலைப்படை தாக்குதலுக்கு அஞ்சி

# அரசியல் முக்கியஸ்தர்கள் தமது இருப்பிடங்களை மாற்ற முயற்சி

## அரசிடம் பாதுகாப்பு வழங்க கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து பல அரசியல் முக்கியஸ்தர்கள் தமது இருப்பிடங்களை மாற்றிக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைப்படைத்தாக்குதலுக்கு தாமும் இலக்காகலாம் என்ற பீதியின் காரணமாகவே இவர்கள் தமது இருப்பிடங்களை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனராம்.

பொது வைபவங்கள், மற்றும் கூட்டங்களில் கலந்து கொள்வதை இந்த அரசியல் வாதிகள் தவிர்த்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதுவரை காலமும் தாம் பயன்படுத்திய ஆடம்பர வாகனங்களை இவர்கள்மாற்றி வருவதாகவும் தமது பாவனைக்கு பொதுமக்கள் பாவித்து வரும் சாதாரண வாகனங்களைப் போன்ற வாகனங்களையே இனிமேல் பாவிக்க விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமது இருப்பிடங்களிலிருந்து நாடாளுமன்

(4ம் பக்கம் பார்க்க)

### சேவை முன்பயிற்சியை

## யாழ். நகரில் நடத்துமாறு கல்வி பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகள் சேவை முன் பயிற்சி 1989ம் ஆண்டு யாழ். நகரில் நடைபெற்றது. இவ்வாண்டு அதிக எண்ணிக்கையானோர் இப்பயிற்சிக்காக அழைக்கப்பட்டுள்ளனர். தற்போதைய போக்குவரத்து வசதியின்மை காரணமாக இப்பயிற்சிநெறியை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளரை வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம்கேட்டுள்ளார். (159

### மன்னார் - அ'புரம் எல்லையில்

## பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் — மன்னார் எல்லைப்பகுதியில் அமைந்திருந்த வண்ணான்குளம். கந்துருவெல, வீரவெல ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள்மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலின் போது பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம்:

* ரி 81 எல். எம். ஜி. -01
* ஏ கே. எல். எம். ஜி. -01
* ரி 56 ரக துப்பாக்கிகள் -20
* 40 மி. மீ. பிஸ்டல்கள்-02
* 40 மி. மீ; மோட்டோர் -02
* எஸ். எல். ஆர். துப்பாக்கி-01
* ஜி 3 ரக துப்பாக்கி -01
* ஆர். பி. ஜி. -01

(4ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. வில் சேர்ந்தனர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 1500 உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகி ஐ. தே. கட்சியில் சேர்ந்துள்ளனர்.

## பஸ்ஸில் கிரனேற்

(கொழும்பு)

தென்பகுதியில் தனியார் பஸ் ஒன்றில் கிரனேற் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதகே சீதுவை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

### கைதான தமிழ் இளைஞர் குறித்து:

## ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பொலிசாரினால் கைது செய்யப்படும் வடபகுதி தமிழ் இளைஞர்கள் தகுந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி பிரேமதாசா பொலிஸ் மாஅதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு பிரதி மேயர் கே. கணேசலிங்கத்தின்

(4ம் பக்கம் பார்க்க)

### கொப்பேகடுவ விவகாரம்:

## சர்வதேச விசாரணை மூலமே திருப்தி ஏற்படும் -லலித் பேட்டி

(லண்டன்)

லெப்டினன் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கொலை குறித்து இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் எதிர்க்கட்சியினரும், பொதுமக்களும் திருப்தி கொள்ளாததன் காரணமாகவே சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

### பட்டதாரி ஆசிரியர் பயிற்சி

## கல்வி அமைச்சுக்கு மீண்டும் அரச அதிபர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர்கள் கொட்டகலைக்கு பயிற்சிக்கு செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் சம்பந்தமாக உடன் பதில் அனுப்பும்படி யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கல்வி அமைச்சுக்கு இரண்டாவது தடவையாக அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

பட்டதாரி ஆசிரியர்கள் கொட்டகலையில் நடைபெறவிருக்கும் ஒருவாரப் பயிற்சிக்கு பிரயாணச் சிக்கலினால் உரியநேரத்துக்கு செல்லமுடியாதிருப்பதாகவும் அப்பயிற்சி முகாமின் திகதியை பிற்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் கொந்தளிப்பு தவிர்க்கப்பட்டது

(கொழும்பு)

அரசுக்கு எதிரான திருமதி லலி கொப்பேகடுவவின் குற்றச்சாட்டின் மூலம் வெடிக்க இருந்த அரசியல் கொந்தளிப்பை ஜனாதிபதி பிரேமதாசா தந்திரோபாயமாக

(4-ம் பக்கம் பார்க்க)

### எக்ஸ்போ கண்காட்சியில்

## இனப்பிரச்னை குறித்து ஹமில்டன் விளக்கம்

(கொழும்பு)

எக்ஸ்போ - 92 கண்காட்சியில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இதுதொடர்பாக

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையிலும் நேற்று ஆராயப்பட்டது

(கொழும்பு)

கொப்பேகடுவ கொலையுண்ட சம்பவம் பற்றி திருமதி லலி கொப்பேகடுவ ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் நேற்று அமைச்சரவையிலும் ஆராயப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### திருவிளக்குப் பூஜை

தத்துவமும் வழிபாடும் என்ற கைநூல் விற்பனைக்குண்டு. ரூபா 20-00. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-7019)

### விற்பனைக்கு

வியாபாரிகள் தங்கள் வியாபார ஸ்தாபனத்தை விளம்பரம் செய்வதற்கு தேவையான கலண்டர்கள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். அச்சுப்பதிவு செய்யப்படாத கலண்டர்கள், சிலிப்புகளும் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [எ-2631]

### அதிஷ்டம் அழைக்கிறது

விவாகத் தடை, கல்வித் தடை போன்ற எத்தகைய கஷ்டங்களும் நீங்க சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். புதிய இடமாற்றம் ஸ்ரீ சக்தி கணேஷ் உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 158 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-7021)

### அழகியற் கல்வி பரதநாட்டியம்

[அடிப்படை அறிவும் ஆரம்ப விளக்கமும்] விளக்கப் படங்களுடன் கூடியது G. C. E. O/L பரீட்சார்த்திகளும் ஏனையோரும் படித்துப் பயன்பெறலாம். சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். சிவம்மெடிகல் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை, சாவகச்சேரி. (சி-7025)

### நோவு வைத்தியம்

ஒட்டுசுட்டான் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6888)

### சித்திரம்

வெளிவந்துவிட்டது சித்திரம். ஆண்டு 11க்குரிய விளக்கப் படங்கள். அலங்காரங்களும், விளக்கப்படங்களும் தொகுதி I. 6-ம் ஆண்டு தொடக்கம் அனைத்து வகுப்புக்களிலும் பாவிக்கலாம். தயாரிப்பு: யசோ. வெளியீடு: நடுவுத்துருத்தி. (சி-7023)

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்
Spoken English
by
Britto
புதிய பிரிவு
ஆரம்பம்
5-12-92
(2 மணி)
(எ-2640)

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

### புதிய வகுப்புக்கள்
[கல்வியாண்டு – 1993]

1993 கல்வியாண்டிற்கான ஆண்டு4 தொடக்கம் ஆண்டு11 வரையான புதிய வகுப்புக்கள் 05-12-92 சனி பி. ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. சகல பாடங்களும் கற்பிக்கப்படும். யாழ். முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை. பயிற்சிப்பரீட்சைகள் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குச் சிறந்த நிறுவனம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [ஏ-2642]


## இராசி பலன்

**04 12-1992**
**(தமிழுக்கு கார்த்திகை 19)**
**வெள்ளிக்கிழமை**

தசமி பி. இ. 40 5 வரை, உத்தரட்டாதி மு. இ. 11-17 வரை தசமி பி.இ. 4-05 வரை சித்தாமிர்தம் இராகுகாலம் பகல் 10-46 முதல் 12-16 வரை. சுபநேரம் காலை 6-16 முதல் 7-46 வரை.

மேஷம்: வாழ்க்கை துன்பம், அற்பர் நேசம். ஏமாற்றம்.
இடபம்: உறவினர் பாசம், சாதுரியம் தொழில் சிறப்பு.
மிதுனம்: வீண்பேச்சுக்கள், சகோதர உதவி, உல்லாசம்.
கடகம்: அலைச்சல். கருத்து வேறுபாடு. பணவிரயம்.
சிங்கம்: கெட்டசகவாசம். தொழில்போட்டி. யோசனை.
கன்னி: மனவைராக்கியம், குடும்பமகிழ்ச்சி, புதிய நட்பு.
துலாம்: தொழில் வெற்றி, தானதர்மம் நண்பருதவி.
விருச்சிகம்: குற்ற உணர்வு, மனசஞ்சலம் காரியத்தடை.
தனுசு: கடுமையான சொற்கள், பிறர் வெறுப்பு, மனக்கவலை.
மகரம்: மனத்துணிச்சல், காரிய சாதனை, குடும்பசுகம்.
கும்பம்: மறைமுகப்பகை, தொழில்நஸ்டம், வேறுப்பு.
மீனம்: காரியசித்தி' பண வரவு, நோய்தணியும்.

— ஜோஸ்யர்

# மனநோயாளி பெரும் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

மனநோயினால் பாதிக்கப்பட்ட வயதான ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதிக்கு முன்பாக உள்ள கடைகளில் வைக்கப்பட்டிருந்தசோக்கேஸ்களை அடித்து நொருக்கியுள்ளார்.

அதன் பின்னர் அந்த மன நோயாளிகிணற்றுவாளியுடன் ஆவேசம்கொண்ட நிலையில் வெளிநோயாளர் பகுதிக்குள் உட்புகுந்து பெரும் அட்டகாசம் புரிந்தார்.

உடனே அங்கிருந்த ஊழியர்கள் காவலாளிகள் அவரை ஒருவாறு பிடித்து விடுதியில் சேர்த்தனர். (56)

## வடக்கு—கிழக்கில் படை அதிகாரிகளுக்கு திடீர் பதவி உயர்வு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கைக்கு பொறுப்பான படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ தலைமைப்பீடம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் லக்கி அல்கம, வடபகுதி இராணுவ தளபதி பிரிகேடியர் ரேகான் டி எஸ் தலுவத்த ஆகியோர் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக இராணுவ தலைமைப்பீடம் மேலும் தெரிவித்துள்ளது.

பிரிகேடியர் லக்கி அல்கமவின் நியமனம் கடந்தஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்தும், பிரிகேடியர் ரேகான் தலுவத்தவின் நியமனம் அக்டோபர் முதலாம் திகதியிலிருந்தும் அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

மேலும் 5 கேர்ணல்கள் பிரிகேடியர்களாகவும், 6 லெப். கேர்ணல்கள் கேர்ணல்களாகவும் பதவி உயர்த்தப்பட்டும் உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## திருமலை சுற்றிவளைப்பில் ஒன்பது தமிழர் கைது

(திருமலை)

திருமலை நிலாவெளியிலுள்ள கோபாலபுரம் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 9 தமிழர்களைக் கைதுசெய்துள்ளனர்.

பழனித்தம்பி சுந்தரலிங்கம் (60வயது), விஜித்தா (29வயது) அ. பேரின்பராசா 30வயது), அ.அன்ரா (25வயது), திருமதி தங்கராசா 55வயது), அ.காளியப்பு (70 வயது), செல்லத்துரை (40 வயது), கந்தசாமி யோகம் (32 வயது), முத்துக்குமார் (40 வயது ஆகியோரே ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

கடந்த 21-ம் திகதி முதல் 27-ம் திகதி வரை இராணுவச் சுற்றிவளைப்புதிருமலைகோபாலபுரம் பகுதியில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (க)


# வலிகாமம் மேற்கு பிரதேசசபை
## சுழிபுரம்
## 1993-ம் ஆண்டிற்கான
# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம்/வட்டுக்கோட்டை/சங்கானை/அராலி ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க் குறிக்கப்பட்ட இறைச்சிக் கடைகளிற்கான சீல் வைத்த கேள்விகள் 18-12-92 ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரப் பணத்தையும் 17-12-92 பிற்பகல் 2-00 மணி வரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தேவையான விபரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகை. | கேள்வி வைப்புப் பணம். | கேள்விப் பத்திரப் பணம். |
|---|---|---|---|---|
| 1. சங்கானை | 1. மாட்டிறைச்சிக் கடை. | 55,000.00 | 250.00 | 25.00 |
| | 2. ஆட்டிறைச்சிக் கடை. | 3,520.00 | 100.00 | 25.00 |
| 2. சுழிபுரம் | 1. மாட்டிறைச்சிக் கடை. | 8,000.00 | 100.00 | 25.00 |
| | 2. ஆட்டிறைச்சிக் கடை. | 1,100.00 | 50-00 | 25.00 |
| 3. வட்டுக்கோட்டை | 1. மாட்டிறைச்சிக் கடை | 3,300.00 | 100.00 | 25.00 |
| | 2. ஆட்டிறைச்சிக் கடை. | 5.500.00 | 100.00 | 25.00 |
| 4. அராலி | 1. மாட்டிறைச்சிக் கடை | 2,750.00 | 100.00 | 25.00 |

வட்டுக்கோட்டை மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகளும், அராலி மாட்டிறைச்சிக் கடையும் சித்தியெய்திய கேள்விக்காரர் தாமே வியாபாரத் தளத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். கொல்களமும், தொழுவமும் சங்கானையில் எம்மால் அமைக்கப்பட்டிருக்கும்.

ரூபினி கனகரத்தினம்
விசேட ஆணையாளர்,
வலி- மேற்கு பிரதேச சபை.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
சுழிபுரம். 2-12-92.

(ஏ-2639)

## வலிகாமம் கொத்தணி- சங்கானை
# பதவி வெற்றிடம்
## பொது முகாமையாளர்

கல்வித் தகைமை:

இரசாயனத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானப் பட்டதாரி அல்லது வடிசாலை அல்லது அதற்கு ஒப்பான ஸ்தாபனத்தில் உற்பத்தி சுதனிடுதலில் 15 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது உற்பத்தி நிறுவனமொன்றில் முகாமையாளர் பதவியில் கடமையாற்றிய அனுபவம் பெற்றவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

போட்டி அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்,

சம்பளம்: 4000-00 — 150 x 4 — 200 x 7 — 6000/-
இத்துடன் கூட்டுறவுச்சேவையாளர்களுக்குரிய மேலதிக படிகளும் வழங்கப்படும்.

வயது: 25 வயது முதல் 55 வயது வரை.

விண்ணப்ப முடிவு திகதி: 15-12-92

விண்ணப்பதாரிகள் மூலச்சான்றிதழ் தே. அ. அட்டை ஆகியவற்றுடன் 19-12-92 காலை 10-00 மணிக்கு கொத்தணி காரியாலயத்தில் நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்கு சமூகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

முகவரி:

பொதுமுகாமையாளர்
வலிகாமம் கொத்தணி
சங்கானை

(சி-7028)


சுத்தக் காற்றை சுவாசிக்க
சூழலெல்லாம் மரம் நடுவோம்

# அவதூறு வழக்கில் கருணாநிதிக்காக வாதிட

# 350 வழக்கறிஞர்கள் உயர்நீதிமன்றில் ஆஜர்

## குறுக்கு விசாரணைக்கு ஜெயலலிதாவை அழைக்க மனு

ஜெயலலிதா ஆட்சியில் 'இம்'மென்றால் சிறைவாசம்; ஏனென்றால் வனவாசம்தான் பரிசு என்று எதிர்கட்சிக்காரர்கள் கிண்டல் செய்துகொண்டிருந்தது இப்போது நிஜமாகிக் கொண்டு வருகிறது.

இந்த அளவுக்கு வழக்குத் தொடர்வதில் ஜெயலலிதா அரசு சாதனை படைத்து வருகிறது. பத்திரிகைகள்மீதுதான் கூடுதலாக அவதூறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கடைசியாக மாலைமுரசு மீதும், சுப்பிரமணியசுவாமி மீதும் தமிழக அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது.

சந்திரலேகா என்ற ஐ. ஏ. எஸ். அதிகாரியை தமது நல்லாட்சி இயக்கத்தில் சேர்த்த பின்னர் அவரை வைத்துக் கொண்டு சுவாமி நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்படிப்பேட்டி கொடுத்ததற்காக சுவாமி மீதும் அப்பேட்டியை அன்று மாலையே வெளியிட்ட மாலைமுரசு மீதும் தமிழக அரசு உடனடியாக கிரிமினல் வழக்குத் தொடுத்துள்ளது.

அத்துடன் சந்திரலேகா பற்றி சுவாமி அளித்த பேட்டியைப் பிரசுரித்தால் கிரிமினல் வழக்குத் தொடரப்படுமென்று அரசு அனைத்து பத்திரிகைகளையும் மிரட்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் தலைமைச் செயலர் ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் சுப்பிரமணிய சுவாமி சென்னையில் நிருபர்களிடம் பேசியபோது முதலமைச்சருக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அக்கருத்துக்களுக்காக அவர் மீது கிரிமினல் வழக்குத் தொடரலாம். இ. பி. கோ. 499, 500 ஆவது விதிகளின் கீழ் மான நஷ்டமும் கோரலாம். எனவே சுவாமிக்கு எதிராக வழக்குத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே வேளையில் சுவாமி வெளியிட்ட கருத்துக்களை பிரசுரிக்கும் பத்திரிகைகள், பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள், பதிப்பகத்தார் மீதும் கிரிமினல் வழக்குத் தொடரப்படுமென்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையையும் அனைத்து பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்து கட்டங்கட்டி வெளியிட்டுள்ளன. அதே வேளையில் சுவாமியின் பேட்டியை கூடிய விரிவாக வெளியிட்டுள்ளனர்.

மாலைமுரசு தி. மு. க. சார்புப் பத்திரிகை. அடுத்து எந்தெந்த பத்திரிகைகள் மீது நடவடிக்கை தொடருமெனத் தெரியவில்லை.

மாலைமுரசு மற்றும் சுப்பிரமணிய சுவாமி மீது தொடரப்பட்ட வழக்குகள் தமிழக அரசு தொடர்ந்துள்ள அவதூறு வழக்குகள் வரிசையில் 33ஆவது 34 ஆவது வழக்குகளாகும். பத்திரிகைகளுக்கு எதிரான தமிழக அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து டில்லியில் பத்திரிகைகளுக்கு சிலிடம் முறையிடப்படவிருக்கிறது.

தி. மு. க. தலைவர் திரு. கருணாநிதி மீதும் பல வழக்குகள் உள்ளன. கடந்த மே மாதம் 3 ஆந் திகதி நடந்த தி. மு. க பொதுக்கூட்டத்தில் ஜெயலலிதாவை குறை கூறி கருணாநிதி அவதூறாகப் பேசினார் என்று கூறி தொடரப்பட்ட வழக்கு கடந்த வாரம் சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது கருணாநிதியே நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அவருக்காக அன்று 350 தி. மு. க. வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள் அவர்கள் இந்த வழக்கில் குறுக்கு விசாரணைக்காக ஜெயலலிதாவும் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட வேண்டும் என்று கோரி மனு கொடுத்துள்ளார்கள். இந்த வழக்கு டிச. 7-ம் திகதி விசாரணைக்கு வருகிறது.

'பிசினஸ் ஸ்டாண்டர்டு' என்ற பத்திரிகையின் மீது முதல்வர் ஜெயலலிதா அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். ஜெயலலிதா தொடர்ந்த 27 வது அவதூறு வழக்கு இது.

கல்கத்தாவில் இருந்து வெளிவரும் தினசரி பத்திரிகை 'பிசினஸ் ஸ்டாண்டார்டு' இப்பத்திரிகையில் கடந்த மே 9 ஆம் திகதிய இதழில் இரு முதல்வருக்கிடையில் சிக்கிய பிரதமர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. இதில் காவிரி பிரச்சினை குறித்து அலசப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் தன்னைப் பற்றி மிக அவதூறாக எழுதப்பட்டுள்ளது, எனவே அப்பத்திரிகை மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி முதல்வர் ஜெயலலிதா சென்னை சிட்டி சிவில் கோட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேலும் நக்கீரன் வாரப் பத்திரிகை மீது ஒரு அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. டி. ஜி. பி. ஸ்ரீபால், டி. எஸ். பி. (சிபிசி ஐடி) மாதவராஜ் ஆகியோர் இவ்வழக்கை தொடர்ந்துள்ளனர்.

கடந்த மே 7 ஆந் தேதிய நக்கீரன் இதழில் அச்சக அதிபர் ஐயா படுகொலைக்கு பரிகாரம் என்ன என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. அதில் அவதூறாக எழுதியுள்ளதாக இருவரும் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இதுவரை 34 அவதூறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதில் 29 அவதூறு வழக்குகளை முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்துள்ளார். அமைச்சர்கள் நெடுஞ்செழியன் மதுசூதனன் இரண்டு வழக்குகள் தொடர்ந்துள்ளனர். மற்றவை அதிகாரிகளால் தொடரப்பட்டன. அரசியல் வாதிகள் பல்வேறு பத்திரிகைகள் மீது இந்த வழக்குகள் போடப்பட்டுள்ளன. அதிக பட்சமாக தி. மு. க. பேச்சாளர் வெற்றி கொண்டான் மீது 8 வழக்குகள் உள்ளன. முதல் அவதூறு வழக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் திகதி போடப்பட்டுள்ளது.

---

## சோமாலியாவுக்கு 25 ஆயிரம் அமெரிக்க படைகள்

(வாஷிங்டன்)

சோமாலியாவுக்கு 25 ஆயிரம் அமெரிக்கப் படைகளை அனுப்புவதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை இன்று அனுமதி அளிக்குமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சோமாலியாவில் நிலவும் பட்டினிச் சாவைத் தடுப்பதற்காக உலகத் தொண்டர் ஸ்தாபனங்கள் அனுப்பும் உணவுப் பொருட்களைக் கொள்ளையடிப்பதுடன், ஐ. நா படைகளுக்குப் பெரும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி வரும் சோமாலிய நாட்டு கொள்ளைக் கும்பல்களின் அட்டகாசங்களை அடக்குவதற்கே அமெரிக்கா தனது படைகளை அங்கு அனுப்புவதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியை கடந்த வாரம் கோரியிருந்தது. (வி)

---

## கிரிக்கெட்: இலங்கை—நியூஸிலாந்து முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கும் நியூஸிலாந்துக்குமிடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப்போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசு இலங்கை துடுப்பாட்டக்காரரான ரோஷான் மகானாமாவுக்குக் கிடைத்தது.

ஸ்கோர் விபரம்: இலங்கை 327-6, நியூஸிலாந்து 288, 195 — 5.

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று வெள்ளிக்கிழமை கேதாராம விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (வி)

---

## கடற்படையினர் ரோந்து அதிகரிப்பு மீனவர் அவதி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தினமும் அதிகரித்திருப்பதால், மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினரின் சிறிய படகுகள் அடிக்கடி ரோந்து செல்வதால் மீன் பிடித் தொழிலை மேற்கொண்டு செய்யமுடியாத நிலையில் மீனவர் உள்ளனர்.

அண்மைக் காலமாக வடமராட்சி கடற்பரப்பில் மீனவர்கள் தாக்கப்பட்டும், படகுகள் சேதமாக்கப்பட்டதும் தெரிந்ததே. (56)

---

## காரைநகர் ஒய்வூதியர்க்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களினது ஓய்வூதியக் கொடுப்பனவு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள வங்கி காரியாலயத்திலும் வைத்து கொடுப்பனவு செய்யப்படும்.

---

## ஏற்பு தடுப்பூசி தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் செயற்பட்டு வரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஏற்பு தடுப்பு ஊசி மருந்து நீண்ட நாட்களாக இல்லாமையால் நோயாளர்கள் மிகுந்த சிரமமடைகின்றனர். (72)

---

## புழுத்தாக்கத்தில் நெற்பயிர் அழிவு

(யாழ்ப்பாணம்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நெற்பயிர்கள் பெருமளவில் அறக்கொட்டியான் புழுத்தாக்கத்தால் அழிவுற்று வருகின்றது. விவசாயிகள் இதனால் பெரிதும் கவலையடைந்துள்ளனர். இப்புழுத் தாக்கத்தை கட்டுப்படுத்த கீழே தரப்படும் மருந்துகளில் ஒன்றை வயல்களுக்கு உடனடியாகத் தெளிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் விவசாயப் பகுதியினரைக் கேட்டுக் கொள்கின்றனர்.

ஏனைய பிரதேச மக்களும் நெல் வயல்களையும் சிறுதானிய பயிர்களையும் கவனித்து ஏற்ற பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்கவும்.

குளோரிபைறிபொஸ்-20 (E C) அல்லது பென்தையன் அல்லது மொனோகுருடட்டோபொள் ஆகிய மருந்துகளில் எதுவானாலும் ஒன்றை போத்தலில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவுகளில் பாவிக்கவும். இப்புழுவின் தாக்கம் இரவிலேயே அதிகமாக இருப்பதனால் இம்மருந்தை மாலை வேளையில் வீசுவது சிறப்புடைது.

மேலும் பாரம்பரியமுறைகளிலும் இதனை கட்டுப்படுத்தலாம். வயலில் நீரை பயிரை மூடும் அளவுக்கு கட்டி வைப்பதன் மூலமும் நீரின்மேல் சில துளி மண்ணெய் தெளிப்பதன் மூலமும் இத்தாக்கத்தை பெருமளவில் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (வி)

---

ஆவணங்களை சமர்ப்பிக்க

## தமிழக அரசுக்கு நீதிமன்று உத்தரவு

(சென்னை)

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதிக்கு எதிரான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் தொடர்பான அனைத்து ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசுக்கு நேற்றுமுன் தினம் உத்தரவிட்டுள்ளது.

எந்த அடிப்படையில் விசாரணைக்கமிஷன் நியமிக்கப்பட்டது என்பதனை உயர்நீதிமன்றம் அறிய விரும்புவதாலேயே மேற்படி உத்தரவு விடுக்கப்பட்டதாக தற்காலிக தலைமை நீதிபதி வி. இரத்தினம், நீதிபதி மி. சோமசுந்தரமும் தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசு விசாரணைக் கமிஷன் நியமித்தது சரியில்லை என்ற திரு. கருணாநிதியின் கோரிக்கை தனி நீதிபதியால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து திரு. கருணாநிதி உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தபோதே மேற்கண்ட உத்தரவு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

---

## கிராம அபிவிருத்தி சங்கங்களின் பதிவுகள் ரத்தாகின

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான புதிய யாப்பின் (உப-விதிகள்) பிரகாரம் தற்பொழுது செயற்படாதிருக்கும் அல்லது செயற்பட்டுக்கொண்டிருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் என்பனவற்றின் பதிவுகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுவிளதாக தெரிவிக்கப்படுகிறது.

1992-ம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் புதிய யாப்பின் பிரகாரம் அபிவிருத்திச்சங்கங்களை மீண்டும் புதுப்பித்துப் பதிவுசெய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ் பிரதேச செயலர் பிரிவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சங்கங்களும் முன்பு செயற்பட்டு தற்போது செயலிழந்த சங்கங்களும் புதிதாக அமைக்கவிரும்பும்சங்கங்களும் தங்கள் சங்கங்களை இவ்வருடம் டிம்பர்ச மாத இறுதிக்கு முன்னர் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அதற்குவேண்டிய ஆலோசனைகளை யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கான கிராம அபிவிருத்தி அலுவலர் திரு. செ. செல்வரத்தினத்தைச் சந்தித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

---

## மலேரியாவுக்கு குழந்தை பலி

(நெல்லியடி)

மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ஐந்துமாதப் பெண் குழந்தை ஒன்று மந்திகை வைத்தியசாலையில் கடந்த 1ம் திகதி மரணமானது.

அல்வாய் தெற்கு சிவசுப்பிரமணியம் நிசாந்தினி என்னும் குழந்தைக்கே இப்பரிதாப மரணம் ஏற்பட்டுள்ளது. (160)

# 1993-ம் ஆண்டு சுகாதாரத்திற்கான ஆண்டாக யாழ்.மாவட்டத்தில் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் 1993 ஆம் ஆண்டை சுகாதாரத்திற்கான ஆண்டாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பிரகடனம் செய்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் அதிகரித்துவரும் சுகாதார பிரச்னைகளுக்கு இதன்மூலம் தீர்வு காண முடியுமென்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இதனைச் சுகாதாரவசதிகளை ஏற்டுத்திக் கொடுக்க முடியுமென்றும் இணையம் அறிவித்துள்ளது.

இதேவேளை இவ்வாண்டில் சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கையை அதிகரிக்கவுள்ளதாகவும் இணைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ரி)

## எய்ட்ஸ் நோயாளர்கள் தொகை 76 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கையில் 76 பேர் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. கடந்தமாதம் 30ம் திகதி மற்றுமொரு எய்ட்ஸ் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் 1996ம் ஆண்டில் 11,000 பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படுவர் என்றும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ)

## சந்திர கிரகணம்

(கொழும்பு)
இம்மாதம் 10ம் திகதி அதிகாலை பூரண சந்திர கிரகணம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திர கிரகணத்தை இலங்கையில் அன்று அதிகாலை 2-25 தொடக்கம் காலை 8-03 வரை பார்க்கக்கூடியவாறு இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு)

## க. பொ. த. (சா/த) பரீட்சை: மேற்பார்வையாளர்க்கான அறிவுறுத்தல் கூட்டம்

(உடுவில்)
எதிர்வரும் ஏழாம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சைக்குரிய பரீட்சை மேற்பாவையாளர்கள், நிரந்தர நோக்குனர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் ஆறும் திகதி காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல பரீட்சைமேற் பார்வையாளர்கள், நிரந்தர நோக்குனர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்வித் தலைமையகம் அறிவித்துள்ளது. (109)

## இன்று

(நெல்லியடி)
வல்வெட்டி விநாயகர் வித்தியாலய கலைவிழா இன்று 4ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. க. வல்லிபுரநாதன் தலைமையில் நடைபெறும். (160)

0 0 0

(வட்டுக்கோட்டை)
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் திரு. சி சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரமுகர்கள் பலர் இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக்கலந்து கொள்வார்கள். நாடகம், நடனம், சங்கீதம் முதலான கலைநிகழ்ச்சிகள் இவ்விழாவில் சிறப்பாகநடைபெறவுள்ளன. (139)

0 0 0

(பண்டத்தரிப்பு)
வலி. தென் மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகத்தில் புதிதாக நிறுவப்பட்ட இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு ஹெக்டர் ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மருந்துச்சாலையைத் திறந்துவைப்பார். (72)

## 18 படையினர் பலி

(கொழும்பு)
அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மூன்று சிறிலங்கா இராணுவ முகாம்கள்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 18 படையினர் கொல்லப்பட்டனரென்றும் 8 பேர் படுகாயமடைந்தனர் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார். (சு)

## பாடசாலை 3-ம் தவணை விடுமுறை

(உடுவில்)
நாளை 5ம் திகதி சனிக்கிழமையுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அனைத்துப்பாடசாலைகளும் வருட விடுமுறைகளுக்காக மூடப்படும். மீண்டும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நான்காம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும். (109)

## பலசரக்கு கடை கொள்ளை திருடர்கள் கைதாகினார்கள்

(யாழ்ப்பாணம்)
குருநகர் பாங்ஷால் வீதியில் உள்ள பல சரக்குக் கடையொன்றில் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது.

இத்திருட்டை தமிழீழக் காவல்துறையினர் கண்டுபிடித்ததுடன் களவுப்பொருட்களின் ஒரு பகுதியை மீட்டு திருடர்களையும் கைது செய்து புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வி)

## இவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, வவுனியா, மன்னார் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கல்விப்பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு அஞ்சல் திணைக்கள அடையாள அட்டை இல்லாதிருந்தாலும் பரீட்சைக்குத் தோற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தங்கள் பகுதியில் உள்ள அஞ்சல் அதிபர்களால் உறுதி செய்யப்பட்ட புகைப் படங்களை அடையாளஅட்டைகளாகப் பாவிக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். (சு)

### கிளாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)
செய்தனர். நேற்றுஅங்கிருந்து அத்தியாவசிய பொருட்களை ஏற்றிக்கொண்டு பல படகுகள் இக்கரைக்கு வந்தன. இதே வேளை நல்லூர்ப் பகுதியில் ஆயிரக்கணக்கான பயணிகள் யாழ்ப்பாணம் வருவதற்காக காத்துநிற்பதாக தெரிவிக்கப்படுகிறது. (156)

### அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சமாளித்துள்ளார். என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

கொப்பேகடுவவின் மரணம் குறித்த சர்வதேச விசாரணை நடத்தவேண்டும்என்றதிருமதி லலி கொப்பேகடுவவின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதன் மூலம் ஜனாதிபதி இதனை சமாளித்துவிட்டார் என்று மேலும் தெரிவிக்கப் பட்டது. (ரி)

### திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இத்தாக்குதலில் படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

சிலமணி நேரம் தொடர்ந்து இம்முகாம்மீது பலத்த தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

### கொப்பேகடுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மாறு கோரிக்கை விடப்பட்டது.

ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர்களுள் ஒருவரான திரு. லலித் அத்துலத்முதலி பி. பி. ஸி.க்கு நேற்று வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

### தற்கொலைப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
றம், காரியாலயங்கள் மற்றும் பொதுவைபவ நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக வழமையாகப் போய்வரும் பாதைகளையும் மாற்றியமைக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது இருப்பிட மாற்றங்கள் குறித்தும், வாகன மற்றும் போக்குவரத்து மாற்றங்கள் குறித்தும் இவர்கள் அரசுக்கு அறிவித்திருப்பதாகவும் இதற்கென அவர்கள் அரசாங்கத்தின் உதவியைக் கோரியிருப்பதாகவும் தெரிய வருகிறது. (மீ-இ)

### பட்டதாரி

(4ம் பக்கம் பார்க்க)
போடும்படி அனுப்பிய முதல் கடிதத்துக்கு இதுவரை பதில் வராததினாலேயே தற்போது இரண்டாவது கடிதத்தை 'றெட்பானா' அதிகாரியின் மூலம் அனுப்பிவைத்துள்ளார். (வி)

### எக்ஸ்போ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
விபரமாக விளக்கமளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு யுத்தம் பற்றிய அரசின் நிலைப்பாடு குறித்தும் இக்கண்காட்சியில் விளக்கப்பட்டது. (ரி)

### அமைச்சரவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி இந்தக் கடிதத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

ஜெனரல் கொப்பேகடுவ மரணமான சூழ்நிலைபற்றி விசாரிக்க அரசாங்கம் சர்வதேச விசாரணைக் கமிஷன் வைப்பதற்கு முன்வந்துள்ளதென்றும்-

திருமதி கொப்பேகடுவ அனுப்பிய அறிக்கைக்கும் செய்திகள் வெளியிட்ட பத்திரிகைகளின் செய்திகளுக்கும் வேறுபாடுகள் இருப்பதாகவும், இதனால் மக்கள் மனங்களில் தவறான எண்ணங்களை உருவாக்கிவிடும் என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார்.

திருமதி கொப்பேகடுவ ஜனாதிபதிக்கு அனுப்பிய தனது கடிதத்தோடு ஜோர்ஜ் றெயினிங் இன்ரநாசனல் லிமிட்டட் ஸ்தாபனத்தாரின் சிங்கள அறிக்கையும், பத்திரிகைச் செய்தியையும் இணைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

### பஸ்ஸில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அநுராதபுரத்திலிருந்து கொழும்பை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ்ஸிலேயே இந்த கிரனேற் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (க)

### பிரதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டக்களப்பு, திருகோணமலை உட்பட பிரதான நகரங்களில் பொலிசாரும் முப்படையினரும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் பொலிஸ் கொமாண்டோ படையினர் நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாதுகாப்பு கடமைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கோட்டையிலுள்ள நாடாளுமன்றம் செல்லும் பாதையிலும் பொலிஸ் கொமாண்டோப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருகோணமலை மட்டக்களப்பு, கண்டி பகுதிகளில் கடைகளின் முன்னுள் வாகனங்கள் நிறுத்துவதற்கு பொலிசார் தடை விதித்துள்ளனர் அத்துடன் வாகனங்கள் மற்றும் சந்தேகத்துக்குரியவர்கள் தீவிரமாக சோதனை செய்யப்பட்டும் வருகிறார்கள்.

இந் நடவடிக்கைகளுக்காக மேலதிக படையினர் குறிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ரி)

### மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

- * உயர்வலு தொலைத் தொடர்பு சாதனம்-02
- * ஏ. கே. எம். ஜிக்குரிய ரவைக்கூடுகள்-18
- * அதற்குரிய தொடர் ரவைகள்-1280
- * ரி 81 எல். எம். ஜிக்குரிய ரவைக்கூடுகள்-04
- * ரி 56 ரக துப்பாகிக்குரிய ரவைக்கூடுகள்-118
- * எஸ். எல். ஆர். துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள்-08
- * ஜீ 3 ரக துப்பாக்கி ரவைக்கூடு-01
- * நடுத்தர ரவைகள் -30,600
- * நேட்டோ ரவைகள் -260
- * 5. 56 ரக ரவைகள் -578
- * நடுத்தர காஸ்ரவைகள் -50
- * ஆர். பி. ஜி. ஷெல்கள் -08
- * 40 மி. மீ. ஷெல்கள் -02
- * 60 மி. மீ. ஷெல்கள் -65
- * ஆர். ஜி. புறப்ளர்கள் -08
- * 60மி.மீ.ஷெல்பூஸ்டர்கள் 55
- * 60 மி. மீ. ஸ்கோப் -01
- * 60 மி. மீ. காட்றஸ் -06
- * 60 மி. மீ. பியூஸ்கள் - 05
- *ஏ.கே.ரகதுப்பரவாக்கிகள்08
- * எம். 14ரககைக்குண்டுகள் 14
- * என்73ரககைக்குண்டுகள்-77
- * என் 75ரக கைக்குண்டுகள் 18
- * ரி.என்.ரி.கைக்குண்டுகள் 08
- * அல்டிமெட் எல். எம். ஜி. துப்பாக்கி சுடுகுழல -01
- * கிளைமோர்கள் -28
- * தொலைத்தொடர்பு சாதன மின்கலங்கள் -04
- * தொலைநோக்கு சாதனம்-01
- * மின் பிறப்பாக்கிகள் -02
- * ஒளிப்படக்கருவி -01
- * வயர் சுருள்கள் -16
- * ராணுவ சப்பாத்துகள் 81 சோடி
- * தண்ணீர்த் தாங்கிகள் -31
- * ஏ. கே. ரகதுப்பாக்கிக்குரிய ரவைக்கூடு தாங்கி அணிகள்30
- * ஏனைய ரவைக்கூடு தாங்கி அணிகள் 48

இத்தாக்குதலின் போது காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வீரவேங்கை அமுதரசன் (புங்குடுதீவு) நேற்று வீரச்சாவு அடைந்துள்ளார். இவருக்கு புலிகள் தனது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர்.

### கைதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டுகோளையடுத்தே மேற்படி உத்தரவை ஜனாதிபதி விடுத்ததாக தெரியக்கப்படுகிறது.

கடந்த இரு வாரமாக பெருமளவு தமிழ் இளைஞர்கள் கொழும்பில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுவருவது தெரிந்ததே. (க)


## மலிவு விற்பனை

நத்தார் - புதுவருட பண்டிகை நாட்களை முன்னிட்டு 1-12-92 முதல் 31-12-92 வரை எமது நிலையத்தில் சகலவிதமான புடவை வகைகளையும் தைத்த ஆடை வகைகளையும்

**மலிவு விலையில் விசேட கழிவுடன்**

பெற்றுக்கொள்ளலாம்.

**லேய்டன் புடவை நிலயம்,**

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-2636)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/8